# இன்றைய இறைவார்த்தை

# 30-07-2015

## ஆண்டின் பொதுக்காலம் 17ஆம் வாரம் – வியாழன்
## முதல் ஆண்டு

**முதல் வாசகம்:**

மேகம் சந்திப்புக் கூடாரத்தை மூடிற்று.
ஆண்டவரின் மாட்சி திரு உறைவிடத்தை நிரப்பிற்று.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 40 : 16 – 21, 34 – 38**

அந்நாள்களில் ஆண்டவர் கட்டளையிட்டபடியெல்லாம் மோசே செயல்பட்டார். இரண்டாம் ஆண்டில், முதல் மாதம், முதல் தேதியன்று திரு உறைவிடம் எழுப்பப்பட்டது. மோசே திரு உறைவிடத்தை எழுப்பினார். பாதப் பொருத்துகளை வைத்து அதன் மேல் சட்டங்களைப் பொருத்தினார், குறுக்குச் சட்டங்களையும் பொருத்தினார். தூண்களையும் நிறுத்தினார். திரு உறைவிடத்தின் மேல் அவர் கூடாரத்தை விரித்தார். அதற்கு மேல் கூடார மேல் விரிப்பை அமைத்தார். இதுவும் ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்யப்பட்டது. உடன்படிக்கைப் பலகையை அவர் எடுத்து, அதைப் பேழையில் வைத்தார். தண்டுகளைப் பேழையில் செருகினார். இரக்கத்தின் இருக்கையைப் பேழையின் மேல் வைத்தார். திரு உறைவிடத்தினுள் பேழை எடுத்துச் செல்லப்பட்டது. திருத்தூயகத் திரை தொங்கவிடப்பட்டு, உடன்படிக்கைப் பேழை மறைக்கப்பட்டது. இதையும் ஆண்டவர் கட்டளையிட்டபடியே மோசே செய்தார். பின்பு, மேகம் சந்திப்புக் கூடாரத்தை மூடிற்று. ஆண்டவரின் மாட்சி திருஉறைவிடத்தை நிரப்பிற்று. சந்திப்புக் கூடாரத்தின் மேலே மேகம் நின்றிருந்ததாலும், ஆண்டவரின் மாட்சி திரு உறைவிடத்தை நிரப்பியதாலும் மோசே உள்ளே நுழைய முடியாமல் போயிற்று. இஸ்ரயேல் மக்கள் தங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், மேகம் திரு உறைவிடத்தை விட்டு எழும்பும் போதெல்லாம் புறப்பட்டுச் செல்வார்கள். மேகம் எழும்பாதிருக்கும் போதோ, அது மேலே எழும்பும் நாள் வரை, அவர்கள் புறப்பட மாட்டார்கள். ஏனெனில் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் திரு உறைவிடத்தின் மேல் பகலில் ஆண்டவரின் மேகம் இருப்பதையும், இரவிலோ அதில் நெருப்பு இருப்பதையும் இஸ்ரயேல் வீட்டார் காண்பார்கள்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்: 84 : 2, 3, 4 – 5, 7, 10 (பல்லவி 1)**

**பல்லவி: ஆண்டவரே! உம் உறைவிடம் எத்துணை அருமையானது!**

1. என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது. என் உள்ளமும் உடலும் என்றுமுள இறைவனை மகிழ்ச்சியுடன் பாடுகின்றது. பல்லவி

2. படைகளின் ஆண்டவரே! என் அரசரே! என் கடவுளே! உமது பீடங்களில் அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்துள்ளது. தங்கள் குஞ்சுகளை வைத்திருப்பதற்குச் சிட்டுக் குருவிகளுக்குக் கூடும் கிடைத்துள்ளது. பல்லவி

3. உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறுபெற்றோர். அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள். உம்மிடமிருந்து வலிமை பெற்ற மானிடர் பேறுபெற்றோர். அவர்கள் நடந்து செல்கையில் மேலும் மேலும் வலிமை பெறுகின்றார்கள். பல்லவி

4. வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களினும் உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒரு நாளே மேலானது. பொல்லாரின் கூடாரங்களில் குடியிருப்பதினும், என் கடவுளது இல்லத்தின் வாயிற் காவலனாய் இருப்பதே இனிமையானது. பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (திருப்பாடல் 16 : 14b)**

அல்லேலூயா, அல்லேலூயா!
உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி,
ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர்.
கெட்டவற்றை வெளியே எறிவர்.

**✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 13 : 47 – 53**

அக்காலத்தில் இயேசு மக்களை நோக்கிக் கூறியது: "விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக்கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்."

“இவற்றையெல்லாம் புரிந்துகொண்டீர்களா?” என்று இயேசு கேட்க, அவர்கள், “ஆம்” என்றார்கள். பின்பு அவர், “ஆகையால் விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப் போல் இருக்கின்றனர்” என்று அவர்களிடம் கூறினார். இவ்வுவமைகளை இயேசு சொல்லி முடித்த பின்பு அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

ஏம்பா! கஷ்டப்பட்டு கடலில் உழைத்து கௌரவமாக வாழாமல் இப்படி உடலையும் வாழ்க்கையையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்குகிறாயே! கொஞ்சம் சேர்த்து சேமித்து செழிப்போடு வாழலாமே! என்றார் அந்த பங்கு குருவானவர். “சாமி, கடல் வற்றவாபோகிறது” என்றார் நெத்தியடியாக. நிலமும் நெருப்பும், கடலும் காற்றும், ஆகாயமும் கடவுள் மனிதனுக்குத் தந்த வற்றாத செல்வத்தின் ஊற்றுக்கள். இவற்றிலிருந்து நல்லவைகளை வாரி எடுத்து வாழ்க்கையை வளமாக்க வலையாகக் கொடுத்ததுதான் அறிவு. அறிவு என்ற வலையைப் பயன்படுத்தி, தெய்வீக அமைதி உள்ள வாழ்வை, விண்ணரசு வாழ்வை மனிதன் வாழவேண்டும் என்றே இத்தனை செல்வங்களையும் கடவுள் தந்துள்ளார். அறிவு வலை அத்தனையும் அள்ளி வந்தாலும், அறிவெல்லாம் கடந்த மெய்யறிவில், தியானத்தில், கரையில் அமர்ந்து, அள்ளி வந்தவற்றுள் நல்லவைகளை நமதாக்கி, அல்லவற்றை அப்புற எறிந்து விடுவதே விண்ணக நிறைவைத் தரும்.

இன்று மனிதன் வான்வெளியில் வீசும் வலையால் (internet) வற்றாத வளங்களைப் வாரிக் கொண்டு வருகிறான். அனால் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைச் சேகரிக்கவில்லை. மாறாக, வேண்டாதவற்றை, விபரீதமானவற்றைச் சேகரித்து வேதனையில் சிக்கித்தவிக்கிறான். மகிழ்ச்சியைத், விண்ணரசைத் தரவேண்டிய வலை இன்று வேதனையையும் விரக்தியையும் தருகிறது. வலையைப் பயன்படுத்து. கரையில் அமர்ந்து நல்லவற்றை சேகரி. வாழ்வு தெய்வீகமாகும். செபிப்போம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********